# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"

ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

**பதிப்பாசிரியர்கள்**

பேராசிரியர். ம. இரகுநாதன்

திரு. ஈ. குமரன்

திரு. க. அருந்தாகரன்

10, 11 ஜனவரி 2020

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

| | | |
|---|---|---|
| **நூற்பெயர்** | : | **"தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு"** |
| **மொழி** | : | தமிழ் |
| **பதிப்பாசிரியர்கள்** | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| **முதற்பதிப்பு** | : | 10 ஜனவரி 2020 |
| **வெளியிடுவோர்** | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், |
| | | யாழ்ப்பாணம், இலங்கை. |
| **பக்க அளவு** | : | B5 |
| **பக்கங்கள்** | : | 829 |
| **அச்சிட்டோர்** | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், |
| | | இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# இந்து அறிவாராய்ச்சியியலில் வாதம்

**தி. செல்வமனோகரன்**
விரிவுரையாளர்,
சைவசித்தாந்தத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

**சிரேஷ்ட பேராசிரியர் நா.ஞானகுமாரன்**
மெய்யியல் துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

மெய்யியல் என்பது அறிவாராய்ச்சியியலின் பாற்பட்டது. அறிவாராய்ச்சியியல் தருக்கத்தின் பாற்பட்டது. தருக்கம் வாதத்தின் வழி கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒரு விடயம் அல்லது பொருள் பற்றி இருவருக்கிடையில் நடைபெறுவது வாதம் எனப்படும். இது விவாதமாக, பட்டிமண்டபமாக, வழக்காடலாக வளர்ச்சியுற்றுக் காணப்படுகிறது. இந்து அறிவாராய்ச்சியியலை வாதம் பற்றிய தெளிவான கருத்தை நியாயதரிசனமே முன்வைத்தது. சைவசித்தாந்த உரையாசிரியர்கள் பிறசமய – மெய்யியல் நிராகரணங்களுக்கும் தம் சமய, தத்துவ கருத்துக்களை நிலை நிறுத்தும் வாதத்தை வெற்றிபெற கதை உக்திகள் பயன்பட்டன. அதேவேளை இதனை சரிவரப்பயன்படுத்தாதவர் தோல்வித்தானத்தை எய்தினர். அந்தவகையில் அறிவாராய்ச்சியியல் செல்நெறியின் வகிபாகத்தை இவ்வாய்வு மதிப்பிடுகிறது.

**அறிமுகம்**

கருவிக்கையாட்சியும் மொழிப்பயன்பாடும் ஏற்பட்ட காலத்திலேயே மனிதனின் அறிவு பற்றி ஆராய்ச்சியும் ஆரம்பித்து விட்டது. இந்து மெய்யியலின் மூலநூலாகக் கருதப்படும் வேதம் என்பதற்கு அறிவு என்பதே பொருளாகும். வேதத்தின் ஞானகாண்டப்பகுதியான உபநிடதங்கள் அறிவின் விசாரங்களாகவே காணப்படுகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்திய சுதேச மெய்யியல்கள் உருவாயின என்பது பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

மெய்யியலின் உருவாக்கத்துக்கும் செல்நெறிக்கும் அறிவாராய்ச்சியியலே அடிப்படையாகும். அறிவைப் பெறுவதற்கு அறிபவன்(பிரமாதா), அறிபொருள்(பிரமேயம்), அறிகருவி(பிரமாணம்) என்பன அடிப்படையானவை இவை மூன்றையும் கூட்டிணைத்துத் தொழிற்பட வைப்பது அளத்தல்(பிரமிதி) எனவும் இதன்வழி அறிவு(பிரமை/பிரமா) பெறப்படும் எனவும் இந்து அறிவாராய்ச்சியாளர்கள் எடுத்துரைக்கின்றனர். (செல்வமனோகரன்,தி.,(பதி.)2016,ப.16)

ஒருமைத்தன்மை வாய்ந்த ஒன்றாக அறிவு பற்றி விசாரம் இருக்கமுடியாது. அது தன்னைத் தொடர்ந்தும் கட்டவிழ்ப்பு செய்துகொண்டே இருக்கும். அறிவின் செயல் என்பதே இயங்கியல்தான். அவ்வாறான இயங்கியலுக்கு அறிவானது பல்வேறு உக்திகளைக் கையாளுகின்றது.

இந்து அறிவாராய்ச்சியலைக் கோட்பாட்டுத்தளத்துக்கு இட்டுச் சென்ற மெய்யியலாக நியாயத்தைக் குறிப்பிடுவர். நியாயதரிசனத்தின் நியாய சூத்திரம், தர்க்க சங்கிரகம் உள்ளிட்ட நூல்கள் நியாயித்தல் உக்திகளை முன்வைக்கின்றன. அவற்றுள் முதன்மையானது வாதம் ஆகும். உலகின் எல்லா மெய்யியலாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு முன்வைக்கப்படுகின்ற நியாயித்தல் உக்தியாக வாதம் திகழ்கிறது. வாதத்தினை முன்வைப்பவர் வாதி எனப்படுகிறார். வாதியின் கருத்தை ஏற்றும் மறுத்தும் தன்கருத்தை உரைப்பவர் பிரதிவாதி எனப்படுகின்றார். வாதியும் பிரதிவாதியும் வாதிடும் களம் பட்டிமண்டபமாகவோ, நீதியை நிலைநாட்டும் நீதிமன்றாகவோ அன்றி மக்கள் அல்லது குறிப்பிட்ட அறிஞர் கூடியிருக்கும் அரங்கமாகவோ காணப்படும். தனிப்பட்ட இருவரிடையேயும் இது நிகழ வாய்ப்புண்டு. வாதத்துக்கான எதிர்வாதம் முன்வைக்கும் செயற்பாடு உரையாடலின் ஒரு பகுதியாகவும் விவாதமாகவும் அமையும். ஆயினும் தமிழ்ச்சூழலில் வாதம், விவாதம் எனும் சொற்கள் ஒத்த பொருட் சொற்களாகவே கையாளப்படுகின்றன. (கதிரைவேற்பிள்ளை,நா.,2004) அவையிரண்டுக்கும் இடையிலான இன்றியமையா உறவு காலப்போக்கில் இரண்டும் ஒன்று எனக் கருதும் வாய்ப்பை நல்கியிருக்கக்கூடும். விவாதத்தின் பரிமாணமாக பட்டிமண்டபம் அமைந்தது எனலாம்.

இன்றைய காலகட்டத்தைப் போலவே பண்டைய காலத்திலும் சில சந்தர்ப்பங்களில் வெறுஞ்சொற் போர்கள் நடைபெற்றுள்ளன. அவை விவாதத்தின் நியாயித்தற் தளத்துக்கு அப்பாற்சென்று தனிமனித தாக்குதல்களாக குறித்த சமய, மெய்யியல் தளங்களை இழித்துரைக்கும் கோஷங்களாக குரோத மனப்பாங்குடனான இயங்கியற் தளங்களைக் கொண்டதும் வித்துவக் காய்ச்சல் நிறைந்தனவுமாகக் காணப்பட்டன. அவை அறிவாராய்ச்சியலுக்கு உரியவையாகா. பௌத்தத்தின் "உபாய ஹிருதய" எனும் நூல் "ஒருவர் தேவையற்று விவாதத்தில் ஈடுபடக்கூடாது" என்கிறது. (வுரஉஉ,பு.,(வுசயளெ),1939ீ.3) மேலும் இந்து அறிவாராய்ச்சியியலானது வாதமுறை, விவாதவகை, விவாத உத்திகள், தோல்வித்தானங்கள் என்பன பற்றி எடுத்துரைக்கின்றது. இவை யாவும் மெய்மையை அறிதலுக்கான குருசீட அல்லது நட்பார்ந்த உரையாடல்களாகவே ஆரம்ப காலத்தில் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (கிருஷ்ணராஜா,சோ.,2009,ப.25)

தமிழ்ச்சூழலில் சங்கஇலக்கியம் தொட்டு வாதம், வாதி எனும் சொற்களைக் காணமுடிகிறது. "வாதிகை அன்ன கவைக்கதிர் இறைஞ்சி" எனும் மலைபடுகடாமின் வரி (வரி.112) வாதிடுபவன் கையின் இணைந்த விரல்களை வரகுக் கதிர்கள் முற்றி இரண்டாகப் பிளந்து நிற்றலுக்கு உவமிக்கப்படுகிறது. பட்டிமண்டபம் பற்றி மணிமேகலை (வரி.60,6), திருவாசகம் (திருச்சதகம், பா.49) எனும் நூல்கள் குறிப்பிடுகின்றன.வாதம், விவாதமாகி நட்பார்ந்த சூழலுக்கப்பால் அது ஒரு போட்டியாக அமையத் தொடங்கியபோது வெற்றி – தோல்வி மனப்பாங்கு விருத்தியுறத் தொடங்கியது. அதன் குறியீடாக கொடியேற்றும் வழக்கம் தோன்றியதை பட்டினப்பாலை பதிவு செய்கிறது. (வரி.169,170)

தமிழில் வாதியை முன்னிறுத்திய பெருமை மணிமேகலையையே சாரும். சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில் அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, ஆஜீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி, வைணவவாதி, வேதவாதி எனும் வாதிகள் முன்னிறுத்தப்படுகிறார்கள். இவர்களிடம் உம் கடவுள் யார்? மூல நூலெது? எனும் வினாக்களை வினவிய மணிமேகலை "நன்றல ஆயினும் நான் மாறு உரைக்கிலேன்" என்கிறாா். ஆக மணிமேகலையாசிரியர் ஒவ்வொரு வாதிகளும் தத்தம் கருத்துக்களைக் கூறுவதாகக் கட்டமைத்தாரேயன்றி அதற்கான பிரதிவாதத்தை பெரிதும் முன்வைக்கவில்லை. (இராமலட்சுமணன். (பதி). 2001, மணிமேகலை, 27) பிக்கு கூறியவற்றைக்கேட்டு அதனால் கவரப்பட்டு பௌத்தத்தைத் தழுவினாள் மணிமேகலை என்கிறார்.

தமிழ்ச்சூழலில் இடம்பெற்ற பிரபல்யமான வாதங்கள் சைவபக்தியாளர்களுக்கும் சமண, பௌத்த துறவிகளுக்கும் இடையில் இடம்பெற்றன. குறிப்பாகச் சம்பந்தருக்கும் சமணத்துறவிகளுக்கும் இடையில் நடைபெற்ற அனல்வாதம், புனல்வாதம் சம்பந்தர் பெற்ற வெற்றி என்பன பெரியபுராணத்தின் ஊடாகப் பதிவு செய்யப்படுகின்றன. பாடலை எழுதி தீயிலிட அது எரியாது இருத்தல் அனல்வாதமாகவும் ஏட்டில் பாடல் எழுதி ஆற்றில் விடப்பட்ட அது அள்ளுண்டு செல்லாது எதிர்த்தோடி கரைசேரல் புனல்வாதமாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. இவை அற்புதத்தின் பாற்பட்டவையாகவே எடுத்துரைக்கப்படுகின்றன.

இதன் அடுத்தகட்டமாக பிறன் மதத்தைக் கூறி அதனை மறுக்கும் போக்கு எழுகிறது. சங்கரரின் சருவதரிசன சங்கிரகம், சருமதோபந்நியாசம், இராமனுஜரின் பரமதநிராகரணம், சருவான்மசம்பு சிவாசாரியாரின் சித்தாந்ததீபிகை, அகோரசிவாசாரியாரின் சித்தாந்த சமுச்சமயம் என்பனவும் தமிழில் குண்டலகேசி, நீலகேசி, சிவஞானசித்தியார்(பரபக்கம்), சங்கற்பநிராகரணங்கள் என்பன இதற்கு மிக்கசான்றுகளாக உள்ளன. இந்நூல்களின் ஆசிரியர்கள் தத்தம் நூல்களில் குறித்த சமயி தன்கருத்தைக் கூறுவதாகவும் அதைத் தான் அல்லது தனது சமயம் சார்ந்தவர் மறுப்பதாகவும் கட்டமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இது வாதம் - பிரதிவாதம் - மறுப்புவாதம் எனும் தளங்களில் அமைந்துள. சிவஞானமுனிவர் தொடக்கிவைத்த வாதமறுப்பும் கண்டன மரபும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சுதேச, விதேச சமயப் போட்டிகள் உரை நடையிலான கண்டனவுரை, கண்டனவுரைமறுப்பு, கண்டனகண்டனவுரை - கண்டனகண்டனவுரை மறுப்பு எனும் வடிவங்களைத் தோற்றுவிக்கின்றன. இவை வாதமரபின் குறிப்பிடத்தக்க மாற்றமாகவோ வளர்ச்சியாகவோ அமைந்துள்ளன.

### ஆய்வுப்பிரச்சினை

அறிவாராய்ச்சியியல் என்பது மெய்யியலின் பிரதான அம்சம் எனில் அறிவை நிலைநிறுத்துவது தர்க்கம் தர்க்கமாவது நியாயித்தல் நியாயித்தலை நிகழ்த்துவது வாதம் என்ற வகையில் அறிவாராய்ச்சியியல் செல்நெறியில் வாதத்தின் வகிபாகமே இவ்வாய்வின் ஆய்வுப்பிரச்சினையாகும்.

## ஆய்வுஎல்லை

இந்து அறிவாராய்ச்சியல் எனப் பொதுநிலையில் குறிப்பிட்டாலும் இவ்வாய்வு அறிவாராய்ச்சியியலை முதன்முதல் முன்வைத்த நியாயம் மற்றும் இந்து மெய்யியல்களில் இளநிலையான சைவசித்தாந்தம் என்பவற்றை எல்லையாகக் கொண்டமைகிறது.

## ஆய்வின் கருதுகோள்

மெய்யியல் தர்க்கவியலிலும் தர்க்கவியல் வாதத்திலும் தங்கியுள்ளன. அந்தவகையில் வாதமே குறித்த தர்க்கத்தின் உண்மைத்துவத்தை நிறுவவும் வெற்றியைப்பெறவும் உதவுகிறது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

## இலக்கிய மீளாய்வு

பேராசிரியர் சோ.கிருக்ஷ்ணராஜா 'இந்திய மரபில் தருக்கசிந்தனை' எனும் தலைப்பில் இந்திய தருக்கவியல் வளர்ச்சி பற்றிய கட்டுரை எழுதியுள்ளார். இதில் வாதம் முதன்மைப்படுத்தப்படுகிறது. ந.ரா.முருகவேள் அவர்களின் தருக்கவியல் விளக்கம் எனும் தோல்விநிலைகள் நியாயங்கள் (வாத உக்திகள்) கூறப்பட்டுள்ன. பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி அவர்களின் சைவசித்தாந்தத்தில் காட்சி எனும் முதுகலைமாணி ஆய்வேட்டிலும் (பிரசுரிக்கப்படாதது) சைவசித்தாந்தம் – தமிழர் மெய்யியல் எனும் நூலிலும் வாத உக்திகள் கூறப்பட்டுள்ளன. 'இந்து அறிவாராய்ச்சியியலில் வாதம்' என வாதம் குறித்த தனித்த கட்டுரையையோ நூலையையோ எம்மால் இதுவரை பார்க்கமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது விவரணம், ஒப்பீடு, வரலாறு எனும் ஆய்வு முறையியல்களைக் கொண்டமைகின்றது.

## வாதம்

இயல்பான ஆர்வத்தினாற் தூண்டப்பட்ட இரு மெய்யியலாளர்கள் நட்புணர்வுச் சூழ்நிலையில் விவாதிப்பதே சொல்லாடல் என்ற பதத்தின் கருத்தாய் இருத்தல் வேண்டும். (கிருஷ்ணராஜா, சோ., 2009, ப.27) இங்கு வாதம் விவாதம் எனப்படுகிறது. தர்க்கசங்கிரகதீபிகை "வாதம் – உண்மை உணர்தல் வேட்கையோன் கதை" என்கிறது. (சிவஞானமுனிவர் (மொ.பெ), 1983, ப.52) நீலகாண்டீயம் அதனை வழிமொழிகிறது. (சிவானந்தையர், 1910, ப.205) மனிதனுடைய சிந்தனாவாற்றலையும் ஆராயும் உணர்வையும் அதன்வழி உருவாகும் கருத்துக்களைக் கட்டிறுக்கமாகவும் தெளிவாகவும் சொல்லும் சொன்வன்மையின் வெளிப்பாடாகவே வாதம் அமைகிறது. எண்ண உருவாக்கம், எண்ண வெளிப்பாடு எனும் இருதளங்களின் வழி எழுத்துக்கள் – சொறகள் – சொற்தொடர்கள் – வாக்கியம் – வாக்கியங்கள் அவற்றின் ஒழுங்கியல்

என்பனவும் அவற்றின் தர்க்கவியலுமே வாதத் திறனைத் தீர்மானிக்கின்றன. வாதித்தல் என்பது ஒரு கட்டமைப்பேஓ கணிதத்தைப் போலஓ கணித நிறுவல், காரணிப்படுத்தல், தொட்டு அனைத்து செயன்முறையுள்ளும் இருக்கும் நேர்த்தி (படிமுறை) வாதத்திலும் பேணப்படவேண்டும். அதுவே வாதமுறையியலாக அமையும்.

வாதங்கள் ஆரம்பத்தில் குருசீட முறையிலும் நட்பார்ந்த சூழலிலும் இடம்பெற்றன. இது ஐயத்தை அடிப்படையாகக் கொண்ட வினாவிடைமுறையிலும் கலந்துரையாடல் முறையிலுமே காணப்பட்டது. ஜமன் - நசிகேதன், மைத்திரேயி - ஞாக்ஞவல்லியர், சுவேதகேது - உத்தலாகலர் முதலானோரின் உரையாடலையும் அரசனான ஜனகனுக்கும் ஞாக்ஞவல்லியருக்குமான நட்புசார் உரையாடலையும் (பிருகதாரணிய உபநிடதம், 4:1) இதற்கு உதாரணங்களாகச் சுட்டலாம். பிற்காலத்தில் இது விவாத முறையாக விருத்தியுறுகிறது. சரதர் உண்மையைக் கண்டறியும் சொல்லாடலாகவே இது இருக்க வேண்டும் என்கிறார். ஆயினும் பிற்காலத்தில் வெற்றி, தன்கருத்தை நிலைநாட்டல் வேண்டும் என்பதன் அடுத்தகட்டமான தன்கருத்து மட்டுமே சரி என நிலைநாட்ட எண்ணும் எண்ணம் (Ego) என்பன முதன்மையுறத் தொடங்கின. இவற்றை அடிப்படையாகக் கொண்டு விவாதத்தை இரு வகையினதாக சரகர் கூறவிழைகிறார். முதலாவது நட்பு சார்ந்த விவாதம் - சமவயதுஃசம அறிவோரிடையே நிகழ்வதாகும். இரண்டாவது வெற்றியை நோக்காகக் கொண்ட விவாதம் - தன் எதிராளியை தோற்கடிப்பதை முழு நோக்காகக் கொண்டதாகும். (Yagava Sarma (ed.), 1993, P.303) மேற்கூறிய இரண்டாவது வகைசார்ந்த சொற்போர் ஆகிய தருக்க வாதத்தை நிகழ்த்துவதற்கு ஸ்தானங்க எனும் சமண நூல் நான்கு தந்திரவுக்திகளை கூறுகிறது. அவற்றுள் முதலாவது யாபனஹேது - எதிராளியைப் பயமுறுத்தி வாதத்திலிருந்து பின்வாங்கச் செய்வதாகும். அடுத்தது ஸ்தாபஹேது - வாதிடுபவரின் வாதத்தை தன் வலிதான வாதத்தால் நிராகரணம் செய்வதாகும். மூன்றாவது வியாம்சகஹேது 1 - சிலேடைக்கும் அப்பால் பல்வேறு அர்த்தங்களைத் தரும் சொற்களைக் கொண்ட வாதத்தை முன்வைப்பதாகும். நான்காவது (வியாம்சகஹேது 2) - வாதிடுபவரின் பதில் வாதத்தை முறியடிக்க பலவிதமான அர்த்தங்களில் ஒன்றை முன்வைப்பதனூடாக அவரைத் தோல்வியடையச் செய்வதாகும். (கிருஷ்ணராஜா, சோ., 2009, ப.28)

ஆகவே ஒரு தருக்க வாதத்தை நிகழ்த்தும் போது தன்னோடு வாதிடவருபவரின் அறிவு, வாதிடும் திறன், நடுவர்களின் பண்பியல், அறிவுமட்டம் மற்றும் கேட்போர்/பார்வையாளரின் அறிவுமட்டம், கருத்துநிலை போன்ற பல விடயங்களை வாதி கவனத்திற் கொள்ள வேண்டும். மேற்படி விவாத முறையை நியாய சூத்திரம் "கதா" என்கிறது. இதனையே தருக்கசங்கிரக, நீலகாண்டீய ஆசிரியர்களும் குறிப்பிட தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் "கதை" என அதனைக் கூறிப் போந்துள்ளனர். பௌத்த தருக்க நூல்களில் ஒன்றாக "கதாவஸ்து" எனும் நூல் காணப்படுவதும் அது விவாதத்துக்குரிய விடயங்கள், வழிமுறைகளைக் குறிப்பிடுவதும் சுட்டத்தக்கது.

விவாதத்துக்குரிய வாதமுறைகளாக சரகர், ஜல்பம், விதண்டை என்பவற்றைக் கூற கௌதமர் நியாயசூத்திரத்தில் "வாதம், விதண்டை, ஜல்பம்" என்பவற்றைக் குறிப்பிடுகிறார். தர்க்கசங்கிரகமும் அதனை வழிமொழிகிறது. உமாபதி சிவாச்சாரியாரும் சங்கற்பநிராகரணத்தில்

“வாத செற்பை விதண்டையும்” (சங்கற்பநிராகரணம், பா.வரி.45) எனக்குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சங்கற்பநிராகரணத்துக்கு உரைசெய்த ஞானப்பிரகாசதேசிகர் “வாதம் என்ற சொல்லுத் தான் கெட்டு விசாரம் என்றும் விசியுழி (விஜிகேசுகதா) என்றும் இரண்டாம் (சித்தாந்தசாஸ்திரம் பதினான்கு மூலமும் உரையும், (1934), ப.989) என்கிறார். மேலும் விசாரம் என்பது குருவும் சீடனுமாகுதல் தன்னோடு ஒத்த பபாதனோடாகுதல் என்றும் மாறுபாடு இன்றிப் பிரமாணங்களில் உண்டாகின்ற தர்க்கங்களைத் தர்க்கித்து அதில் உண்டாகிய குற்றங்களை நீக்கிச் சத்தியமான அர்த்தத்தை நியமிக்கப்படுவது எனக்கொள்க என்கின்றார்.

விசாரமானது குறித்த விடயம் தொடர்பான எதிரெதிரான கருத்துக்களின் வழி முன்வைக்கப்பட்டு இக்கருத்தியலின் நிலைப்பாடு தொடர்பான எதிர்நிலைப்பண்புகளுடைய விளக்கங்கள் தரப்படும். விசாரக்கருத்தியலை வாதமுறையியலின் வழி சான்றுப்படுத்தவேண்டும் எனப்படுகிறது. விசியுழி எனும் சொல்லு தான் கெட்டு செற்பை என்றும் விதண்டை என்றும் இரண்டு வகைப்படும் என்கின்றார். இங்கு செற்பை எனக் குறிக்கப்படுவது ஜல்பமே. இதனை சற்பம் என தர்க்கபரிபாஷை குறிப்பிடுகிறது. (கிருக்ஷ்ணராஜா,சோ.,1988,ப.13) இது சமமான அறிவுடைய அதேவேளை எதிர்த்தளங்களில் இயங்குகின்ற இருவருக்கிடையே நிகழ்த்தப்படும் வாதமுறையாகக் கூறப்படுகிறது. இது உண்மையை அறிதல் எனும் நிலைக்கப்பால் வாதத்தில் வெற்றியீட்டல் என்பதையே இலக்காக உடையது. இதனாலேயே தர்க்கசங்கிரகம் இதனை ‘சாதனம் இரண்டு உள்ள தன் கண் வெல்லும் வேட்கையுடையாற் கதை’ (சிவஞானமுனிவர்,1983,ப.52) என்று கூற, “செற்பை என்றது பிறருடைய அர்த்தங்களை நிராகரித்துத் தன்னுடைய பொருளை மலைவற நாடுதல் எனக்கொள்க” என ஞானப்பிரகாசதேசிகர் (சித்தாந்தசாத்திரம் பதினான்கு மூலமும் உரையும், 1934, ப.989) எனக்கூறுகிறார். மேலும் நீலகண்டீயம் ‘பரபக்கத்தை மறுப்பதாகிய சுபக்கத்தின் சாதனமுடையதன் கண் என்றலாது’ (சிவானந்தையர், 1980, ப.207) என்கிறது. தர்க்கபாஷை ‘உபயசாதனமுடையதாய் வெல்லவேண்டுமென்றும் இச்சையுடையான் கதை சற்பம். அது எல்லா நிக்கிரகத்தினுங் கிடைத்ததிற்கு அதிகரணம். பரசட்சத் தூக்ஷிக்கப்படுகையிற் சுபட்சசாதனப் பிரயோகமுடிவாயுள்ளது சற்பம்’. (கிருக்ஷ்ணராஜா(ப-ர்) 1988, ப.113) என விளக்கிநிற்கிறது. ஆக ஜல்பமானது வெல்லுதல், சுபட்சசாதனப்பிரயோகம் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டது என்பது தெளிவாகிறது. இதனால் இது வாதத்துக்கு வலுச்சமனான முரண்வாதத்தை முன்வைத்தல் , தவறான அதேவேளை சமத்துவமான நியாயத்தை முன்வைத்தல் எனும் வாதவகைகளையும் இது உள்ளடக்கி நிற்கும் என்பர். இவைமுறையே சலம், ஜாதி எனச் சுட்டப்படும். இவ்விருவாதங்களும் வெற்றியைத் தராதுவிடினும் பிரதிவாதியை குழப்பமடையச்செய்யும் தோல்வித்தானத்தை நோக்கிச் செல்லத்தக்க திகைப்பு உள்ளிட்ட உணர்வுகளையும் வழங்கவல்லன.

விதண்டையானது ‘தன்கோட்பாட்டை நிலைபெறுத்தாத கதை’ என தர்க்கசங்கிரகத்தில் கூறப்பட்டுள்ளது. (சிவஞானமுனிவர், 1983, ப.52) தருக்கபாஷை,“ சுபட்ச தாபனகீனமாய்ப் பரபட்ச தூக்ஷணமாத்திர முடிவாயுள்ள கதை விதண்டை. இவை தண்டிகனுக்குப் பட்சமில்லை. சொல்வார் அவரையுடையதாய்ப் பூர் வோத்தர பட்சத்தைப் பிரதிபாதிக்கும் வாக்கியக் கேதவை கதை” (கிருக்ஷ்ணராஜா(ப-ர்), 1988, ப.113) எனக்கூறியுள்ளது. ஞானப்பிரகாசதேசிகரும் ‘பிறருடைய அர்த்தங்களை நிராகரித்து தன்னுடைய அர்த்தம் தோன்றாது நின்று

சாதிக்கப்படுவது எனக்கொள்க' என இதனை விளக்குகிறார். (சித்தாந்தசாஸ்திரம் பதினான்கு மூலமும் உரையும் 1934, பக்.989, 990)

ஜல்பம், விதண்டை மற்றும் அவற்றுள் அடக்கக்கூடிய ஜாதி, ஜலம் என்பன வெற்றி எனும் இலக்கை நோக்கி நடத்தப்படினும் அவை மாறாக தோல்வியையும் தருவதற்கு வாய்ப்புள்ளவை என்பது தெளிவு. குறிப்பாக வாதம் ஒன்றில் ஈடுபடுபவர் அனுமான அளவையை அதிகம் பயன்படுத்துவார். இது கணித நிறுவலை ஒத்தது. நியாயதரிசனத்தின்படி இது கட்டாயமாக ஐந்து படிநிலைகளில் நிகழ்த்தப்படும். பிரதிக்ஞை, ஏது, திருட்டாந்தம், உபயநம், நிகமனம் என்பன அவை. ஆனால் சைவசித்தாந்திகள் இவற்றுள் பிரதிக்ஞை, ஏது, திருட்டாந்தத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள, பௌத்தரான தர்மகீர்த்தி பிரதிக்ஞை, ஏது எனும் ஈருறுப்புக்களை மட்டுமே முன்மொழிகிறார். இவ்வுறுப்புக்களை உரிய வழியில் பின்பற்றாதுவிடினும் குறித்த ஒரு கருத்தியலை முன்னிறுத்தி வாதிடத்தொடங்கும் ஒருவர் வாதத்தின் போக்கில் தன்னிலையிழந்து குறித்த கருத்தியலை நிராகரிக்கும்போக்கில் வாதிடுதலும் அவரை தோல்வித்தானத்துக்கு இட்டுச்செல்லும் என்பதை மேற்படி மெய்யியலாளர்கள் யாவரும் ஏற்றுக்கொள்வர்.

விவாதத்தில் ஈடுபடுவோர் வெற்றி பெறுவதற்காக பல்வேறு வாதஉத்திகளை அல்லது தந்திர உத்திகளை (Scientific Arguments) பயன்படுத்தியுள்ளார்கள். இவை 32 வகையினதாக இந்துமெய்யியலாளர்களால் எடுத்தாளப்படுகின்றன. அவை அதிகரணம், விதானம், யோகம், பதார்த்தம், ஹேத்வர்த்தம், உத்தேசம், நிர்த்தேசம், உபதேசம், அபதேசம், அதிதேசம், பிரதேசம், உபமானம், அருந்தாபத்தி, சம்சயம், பிரசங்கம், விபர்யயம், வாக்கிய சேடம், அனுமதம், வியாக்கியானம், நிர்வசனம், நிததர்சனம், அபவருக்கம், சுவசம்ஞும், பூர்வபட்சம், உத்தரபட்சம், ஏகாந்தம், அனாகதாவேட்சணம், அதிக்கிரந்தாவேட்சணம், நியோயம், விகற்பம், சமுச்சயம், ஊக்கியம் என்பன கௌடல்யர், சரகர் எழுதிய நூல்களில் இவை எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டெ தொல்காப்பியரும் தமிழில் மொழிபெயர்த்துக் கூறியதாக எஸ்.வையாபுரிப்பிள்ளையும், ரா.இராகவையங்காரும் உரைப்பதை மறுத்துரைக்கிறார் ந.ரா.முருகவேள்.(முருகவேள், ந.ரா., 1960, பக்.113, 114) வித்தியாபூசணரும் இதனை தொல்காப்பியத்திலிருந்தே வடநூலார் பெற்று பிற்காலத்தில் கௌடல்யர், சுச்ருதர் போன்றோரின் நூல்களில் இடைச்செருகல் செய்திருக்கவேண்டும் எனுஞ் சாரப்பரச் சுட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. (Vidyabushana,S.C.,(1969) P.24)

வாதத்தில் ஏற்படும் தோல்விக்குரிய காரணங்கள், இடங்கள் தோல்வித்தானங்கள் எனப்படுகின்றன. இதனை நிக்கிரகத்தானம் என வடமொழியியலாளர் சுட்டுவர். இதனை 21 பிரிவுகளாக சிவநெறிப்பிரகாசம் கூறுகிறது. (சிவாக்கிரயோகிகள், 1968, ப.35) ஏதேனும் ஒரு கருத்தியல் பற்றிய விவாதத்தில் கலந்துகொள்பவர்களுள் ஒருவர் தோல்வியுறுவதற்கு ஏதுவாக அமைவது தோல்வித்தானம் எனப்படுகிறது. இது குறித்த வாதத்தில் ஈடுபவரின் அறிவுக்குறைவு, பிறழ்உணர்ச்சி, வாதத்திறனில் உள்ள குறைவு போன்ற பல்வேறு காரணங்களால் நிகழும். சிவஞானசித்தியார் 'தோல்வித்தானம் இரண்டு' இருபத்திரண்டாம் என்கிறது. (சித்தியார், பா.20)

அப்பிரபத்தி

விப்பிரபத்தி

அப்பிரபத்தியை அர்த்தந்தெரியாதது என சிவாக்கிரயோகிகளும் 'வாதியானவன் தான்சொன்னதும் பிரதிவாதி சொன்னதும் அறியாது இருத்தல்' என மறைஞானதேசிகரும், சிவஞானயோகியார் பேசத்தெரியாமையாகிய தோல்வித்தானம் என்றும் கூறியுள்ளனர். அதேபோல விப்பிரதிபத்தியை வேறேயொன்றாகச் சொல்லுகை என சிவாக்கிரயோகியரும் வாதியானவன் தான் சொன்ன வசனத்தையும் பிரதிவாதியானவன் சொன்னபடி அறியாமல் விபரீதமாக அறிகை என மறைஞானதேசிகரும் 'வாளாதிருத்தல்' என சிவஞானயோகியரும் விளக்குகின்றனர். அப்பிரபத்தியினுள் பிரதிஞ்ஞஹான, பிரதிக்கியாந்தரம், பிரதிக்கியாவிரோதம், பிரதிக்யரசந்நியாசம், ஏத்துவாந்தரம், அர்த்தாந்தரம், நிரர்த்தகம், அவிக்கியாதார்த்தம், அபார்த்தகம், அப்பிராத்தகாலம், நூனம், சந்தப்பூனம், அதிகம், புனருத்தம், அந்நுபாடன் எனும் பதினான்கும் சுட்டப்படுகின்றன. விப்பிரபத்தியினுள் அஞ்ஞானம், அப்பிரதியை, விக்ஷேபம், மகாநுக்கியை (முதானுஞ்ஞை) பரிய நுயோச்சியாபேணம், நிரநுயோச்சியானுபேணம், அபசித்தாந்தம், எத்துவாபாசன் எனும் ஏழும் உள்ளடக்கப்படுகின்றன. சிவாக்கிரயோகியாரின் சிவநெறிப்பிரகாசம் எத்துவாபாசன் எனும் தோல்வித்தானத்தைச் சுட்டவில்லை.(இவைவிரிக்கின் பெருகும் என்பதால் தவிர்க்கப்படுகிறது)

**முடிவுரை**

மனிதவாழ்வியலிலும் மெய்யியலிலும் அறிவு பற்றிய ஆராய்ச்சியும் அதற்கான 'வாதம்' சார்ந்த பிரயோகமும் தவிர்க்க இயலாதவை. அறிவாராய்ச்சிக்கான தருக்கம் வாத அடிப்படையை உடையது. வாதவியல் நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, சாதி, சலம், தோல்வித்தானம் என்பவற்றைக் கொண்டதாகவே அமைந்திருக்கும். ஆனால் வாதத்தை முன்வைக்கும் படித்தரங்களில் தனிநபர் மற்றும் குறித்த மெய்யியல் என்பவற்றின் கருத்தியல், அறிவு, மனப்பாங்கு, திறன், வாதஉக்திகள் என்பவற்றின் வழியேயே வாதத்தின் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது. பண்டைய மரபில் உண்மை பற்றிய ஆராய்ச்சிக்கே பயன்படுத்தப்பட்ட வாதமுறை தற்போது வெற்றி எனும் இலக்குக்கே முதன்மை கொடுத்துப் பயன்படுவது குறிப்பிடத்தக்கது. உண்மை பற்றிய தேடலில் ஏற்படும் வெற்றி மெய்யியலுக்கும் வாழ்விற்கும் நன்மைபயக்கவல்லது. இந்துமெய்யியல் பிற்காலத்தில் உருவான உரையாசிரியர் பலரும் தத்தம் ஆற்றலை வெளிக்காட்டவும் தமது மெய்யியலும் சமயமுமே உண்மை என நிறுவவுமே வாதத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அது சிலவேளைகளில் உண்மை பற்றிய தேடலாகவும் பலவேளைகளில் ஆணவத்தின்வெளிப்பாடாகவும் (Ego) அமைந்திருப்பதை அவதானிக்கமுடிகிறது. காலதேச வர்த்தமானத்துக்கேற்ப தம்வாதமுறைமையை கட்டமைத்த இந்துமெய்யியல்களே இன்றும் நின்று நிலவுகின்றன என்ற வகையில் இந்து அறிவாராய்ச்சியலின் பெறுமானத்தை தீர்மானிக்கும் சக்தியாக வாதம் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

**உசாத்துணை நூல்கள்**


அறுவருரை, சர்வதாரிவருடம், சிவஞானசித்தியார் சுபம், சிவஞானபோத அச்சியந்திரசாலை, தமிழ்நாடு.

கிருஷ்ணராஜா,சோ., 2009, நினைவுரு, குடும்பத்தினர், யாழ்ப்பாணம்.

கிருஷ்ணராஜா,சோ.,2009, (பதி.) 1988, தர்க்கபாஷை, மெய்யியற்றுறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

ஞானகுமாரன், நா., 2017, இந்திய அறிவாராய்ச்சியியல், சேமமடு பதிப்பகம், கொழும்பு.

சிவஞானயோகிகள்(மொ.பெ.), 1983, தர்க்கசங்கிரகம், திருவாவடுதுறை ஆதீனம், தமிழ்நாடு.

சிவாக்கிரயோகிகள், ஸ்ரீ, 1968, சிவநெறிப்பிரகாசம், திருவாவடுதுறை ஆதீனம், தமிழ்நாடு.

சிவஞானந்தையர், தெல்லிப்பழை, (மொ.பெ.), 1910, தர்க்கசங்கிரகம், சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.

செல்வமனோகரன், தி., (பதி), 2016, சிவசங்கரபண்டிதம், சைவவித்யாவிருத்திச்சங்கம், யாழ்ப்பாணம்.

பாலசுப்பிரமணியன்,ம., 1934, சித்தாந்தசாஸ்திரம் பதினான்கு மூலமும் உரையும், திருவதிகைவீரட்டாணம், தமிழ்நாடு.

முருகவேள், ந.ரா., 1960, தருக்கவியல் விளக்கம், சாதுஅச்சுக்கூடம், தமிழ்நாடு.

Satis Chandra Vidyabusana, 1978, **A History of Indian Logic**, Motital Banarsidass Delhi.

Yadava Sarma Ced, 1933, **Caraka Samihila.**